# வங்கக் கடல் கண்டெடுத்த நிலவோ

வங்கக் கடல் கண்டெடுத்த நிலவோ
தங்கமரி மண்ணில் வந்த கதிரோ
உள்ளமெங்கும் பண்ணிசைக்கும் ஸ்வரமோ
வானம் தந்த வரமோ
வாழ்க மாமரி (3) வாழ்க மாமரியே

**1**
புள்ளினங்கள் நதி தேடும்
பூங்காற்று இசை பாடும்
நீலக்கடல் வீடும் நரலைகள் யாவும்
வண்ணமரி புகழ் பாடும்
மாசற்ற மனதில் மாதாவின் வேதம்
மங்காத சுடராய் அரசாளும்

**2**
மெய்யுருகும் மெழுகின் ஒளி
சொல்லாதோ அன்னை மொழி
தெய்வீக கீதம் தேன் சிந்தும் ராகம்
கன்னிமரி சந்நிதியிலே
காரிருளை நீக்கும் ஞான ஒளிநிலவே
தேவதையே மரியே அருள்வாயே

**3**
தாயின் நிழல் பிரிவேனோ
தங்கமுகம் மறவேனோ
ஆகாயம் மேவும் காருண்ய தீபம்
அன்னை உந்தன் பாதத்திலே
தள்ளாடும் சேயை தாலாட்டும் தளிரே
எந்நாளும் கருணை புரிவாயே